**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 448** **நாள்: 18.12.2025**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், அம்பத்தூர் பெருந்தலைவர் காமராஜர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 1,260 மாணவ மாணவியர்களுக்கு, விலையில்லா மிதிவண்டிகளை இன்று வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று (19.12.2025), அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட அம்பத்தூர் பெருந்தலைவர் காமராஜர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைப்பெற்ற விழாவில் பெருந்தலைவர் காமராசர் மகளிர் மேல்நிலைப் பள்ளி 581 மாணவியர்களுக்கும், ராமசாமி மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 182 மிதிவண்டிகளையும், மாணவிகளுக்கு 130 மிதிவண்டிகளையும் முகப்பேர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 180 மிதிவண்டிகளையும், கொரட்டூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 80 மிதிவண்டிகளையும், அத்திப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 107 மிதிவண்டிகளையும் என 1,260 மிதிவண்டிகளை மாணவ மாணவியர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில், மாண்புமிகு மேயர் திருமதி.ஆர் பிரியா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் சாமுவேல், பொது சுகாதார குழுத் தலைவர் டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக் குழுத்தலைவர் பி.கே.மூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி நாகவள்ளி, திரு.கமல், திருமதி பொற்கொடி, திரு.டி.எஸ்.பி.ராஜகோபால், திரு.ரமேஷ் (எ) நீலகண்டன், முதன்மை கல்வி அலுவலர் திரு.எம்.கபீர், மாவட்ட கல்வி அலுவலர் திரு.இ.முருகன், பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**